**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**காணொளிகாட்சி விசாரணை (Video Conference)**
**ஆணை நாள்: 04.06.2025**

**முன்னிலை**
**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண். SA 2264/F/2025**

திரு. வை.ஜெகநாதன் ... **மனுதாரர்**

**/ எதிர் /**

பொது தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
அந்தநல்லூர் - 639101
திருச்சிராப்பள்ளி மாவட்டம். ... **பொது அதிகார அமைப்பு**

## ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.வை.ஜெகநாதன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012 விதி 7-ன் படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி.ஆர் ராஜேஸ்வரி பொதுத் தகவல் அலுவலர்/ துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), வட்டார வளர்ச்சி அலுவலகம், அந்தநல்லூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 09.11.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், அத்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம் எம். ஜி.ஆர் நகரில் விற்கப்பட்ட மனை எண் 12க்கு தங்கள் அலுவலகத்தில் தனி மனை வரன்முறை படுத்துதல் தொடர்பாக (ந.க.எண் ஆ4/3626/2020) கோப்பின் அனைத்து

நகல்களையும் வழங்கவும், எம்.ஜி.ஆர் நகரில் விற்கப்டாத மனை எண் 10இன் தங்கள் அலுவலகத்தில், தனிமனை வரன்முறை படுத்துதல் தொடர்பான (ந.க.பி4/228/022) கோப்பின் அனைத்து நகல்களையும் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காத மனுதாரர் 17.12.2024 நாளிட்ட பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால், 27.01.2025 நாளிட்ட பிரிவு 19(3)இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரியுள்ள ஏற்கனவே 06.12.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரர் கோரியுள்ள தகவல்களை தனிப்பட்ட விபரங்கள் தவிர்த்து ஒரு வார காலத்திற்குள் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தால், மனுதாரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், மனுதாரர் தனிமனை வரன்முறை படுத்துதல் தொடர்பான கோப்பின் நகல்களை கோரியுள்ளார். மனுதாரர் கோரியுள்ள கோப்பு மூன்றாம் நபர் தொடர்புடையதாக இருக்கும் பட்சத்தில் மூன்றாம் நபரின் தனிப்பட்ட விவரங்கள் தவிர்த்து முழுமையான தகவல்கள் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டும். எனவே, இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் வழங்கி கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- *மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை மூன்றாம் நபரின் தனிப்பட்ட விவரங்கள் தவிர்த்து உரிய ஆவண நகல்களுடன் “தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது” என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.*

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 2264/F/2025**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
அந்தநல்லூர் - 639101
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

**மனுதாரர் / மேல்முறையீட்டாளர்**

திரு. வை.ஜெகநாதன்,
3/15, எம்.ஜி,ஆர் நகர், முத்தரசநல்லூர் அஞ்சல்,
ஸ்ரீரங்கம் வட்டம்,
திருச்சி மாவட்டம் - 620101,

Copy to: Judgement File/ Spare.
JE / PA 05.06.2025.